# THIRUMARAI AASAAN



S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385



Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 34 AUGUST- 2021 Issue - 8


ஆசிரியர் உரை

## இரதத்தை நிறுத்தச் சொன்னான்!

இறை உணர்வால் உந்தப்பட்டு, இறை நெறியில் வார்க்கப்பட வேண்டுமென்ற இறை ஆவல் உள்ளவர்களுக்கு, அரும்பெரும் செல்வமாக ஆவியானவரால் அருளப்பட்டதுதான் மறை நூலாகிய பரிசுத்த வேதாகமம். இரு பெரும் பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டுள்ள இந்த ஆன்மீகப் பெட்டகத்தில் இரண்டு ஏற்பாடுகள் உண்டு. ஒன்று பழையது, மற்றொன்று புதியது. இண்டு ஏற்பாடுகளிலும் சரித்திரப் பகுதிகள் உண்டு. புதிய ஏற்பாட்டு சரித்திரப் பகுதியாக அப்போஸ்தலர் நடபடிகள் உள்ளது. இயேசு ஆண்டவர் இரத்தம் சிந்தி சம்பாதித்த சபையின் ஆரம்பம், அதன் அதீத வளர்ச்சி, அதன் பரவல், அது சந்தித்த எதிர்ப்பு ஆகிய தகவல்களோடு, ஒருவர் எப்படி கிறிஸ்துவுக்குள்ளாக வரமுடியும் என்ற உபதேசச் சட்டங்களையும் இது தன்னுள் கொண்டுள்ளது.

இப்படிப்பட்ட ஒரு மகத்தான நூலில் ஓர் ஒன்பது மனமாற்றச் சம்பவங்கள், அதாவது கிறிஸ்துவுக்குள்ளாக வர சம்பந்தப்பட்டவர்கள் என்ன செய்தார்கள் என்பது பற்றிய போதனைகள் இடம் பெற்றுள்ளது. அவைகளுள் ஒன்றாகிய **எத்தியோப்பிய மந்திரியின் மனமாற்றம்** அப்போஸ்தலர் எட்டாம் அதிகாரத்தின் பின்பகுதியில் காணப்படுகிறது. இது குறித்து **மந்திரியின் மனமாற்றம்** என்ற தலைப்பின் கீழாக ஓர் 25 ஆண்டுகளுக்கு முன்பாக **ஆசிரியர் உரை** எழுதியுள்ளேன். ஆயினும், தேவ ஞானத்தால் அருளப்பட்ட இச்சம்பவத்தின் உட்கூறுகளைத் திரும்பத் திரும்பப் படிக்கும் போது, அன்று என் அறிவுக்கு எட்டாத சில பயனுள்ள பாடங்கள் அதற்குள் பதுங்கியிருப்பதை இப்போது என்னால் காண முடிகிறது. ஆகவே, வேறொரு பார்வை கொண்டு இம்மாதம் இச்சம்பவத்தை அணுகியுள்ளேன்.

சரி, இச்சம்பவத்திற்குள் சென்று உள்ளே பதுங்கியிருப் பவைகளைப் பிடித்து வெளிக்கொணருவதற்கு முன் நமது மாறாத வழக்கத்தின்படி இதன் பின்னணிக்குள் கடந்து வந்து விடுவோம்.

ஸ்தேவான் இயேசு ஆண்டவருக்கு முதல் இரத்த சாட்சியாய் மரித்த அந்நாட்களில் எருசலேமிலிருந்து கர்த்தருடைய சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர் தவிர மற்ற யாவரும், யூதேயா, சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப் போனார்கள் [அப் 8:1] அப்படிச் சிதறிப் போனவர்களில் பிலிப்பும் ஒருவன். பிலிப்பு, சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்துக்குச் சென்று கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான். அவனால் செய்யப்பட்ட பிரசங்கங்களுக்கு, அவனால் நடப்பிக்கப்பட்ட அற்புதங்கள் வலுசேர்த்ததால், அவனால் சொல்லப்பட்டவைகளை ஜனங்கள் ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள் [அப் 8:5,6]. தேவனுடைய இராஜ்யத்துக்கும், இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை விசுவாசித்து **புருஷரும், ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள்** [8:12] ஒரு பட்டணத்தில் நற்செய்திப் பிர சங்கத்தைத் தொடங்கிய பிலிப்பு, எருசலேமிலிருந்து வந்தவர் களோடு இணைந்து சமாரியாவின் பல கிராமங்களில் நற்செய்தி அறிவித்து எருசலேமுக்குத் திரும்பி வந்தான்.

மொத்தத்தில் நற்செய்தி ஊழியம் பிலிப்பு போன்றவர்களால் வெகு மும்முரமாக நடந்து கொண்டிருந்த நேரம் அது. ஆத்தும அறுவடையும் படுஜோராக இருந்தது. குறிப்பாக, பிலிப்பு நற்செய்தி ஊழியத்தில் தொய்வுக்கு இடம் கொடுக்கவில்லை. எத்தியோப்பிய மந்திரியை மன மாற்றத்திற்கு உள்ளாக்கிய பிறகும் செசரியாவுக்கு வரும்வரை சகல பட்டணங்களிலும் நற்செய்தி அறிவித்து வந்துள்ளான் [அப் 8:40]

இப்படிப்பட்ட ஒரு சூழலில் தான், தேவனுடைய உலாவும் கண்கள் [II நாளா 16:9] எத்தியோப்பிய மந்திரியின் ஆன்மீக ஆவலையும், சத்தியத் தேடலையும் கண்டது. ஆம், இவன் ஒரு முக்கியமான தேசத்தின் நிதி மந்திரி. எத்தியோப்பியா தேசம் முதல் நூற்றாண்டுக் காலத்தில் இருந்த முன்னணி நாடுகளில் ஒன்று. அந்நாட்டின் அரசியாக **கந்தாகே** என்ற **ஒரு பெண்** இருந்தாள். அவள் அமைச்சரவையில் இவனுக்கு இரண்டாமிடம். அரசி ஒரு பெண்ணாக இருந்தபடியால், ஒட்டுமொத்த நிர்வாகமும் கிட்டத்தட்ட இவன் கையில்தான் இருந்திருக்கும். அப்படி யானால், இவனுக்கிருந்த வேலைப்பளுவின் அளவை எண்ணிப் பாருங்கள். பல நேரங்களில், ஒன்றுக்கும் உதவாதவர்கள்கூட தங்களை ஒரு பொருட்டென்று எண்ணி, ஏதோ இவர்கள் இல்லாவிட்டால் உலகமே இயங்காது என்பதுபோல் அலட்டிக்

கொள்வார்கள். ஆனால், இந்த எத்தியோப்பிய மந்திரியோ இவ்வளவு கடமைகளுக்கும், பொறுப்புகளுக்கும் மத்தியில் தன் பக்திக் காரியங்களை நிறைவேற்ற எத்தியோப்பியாவிலிருந்து எருசலேமுக்கு வனாந்திர மார்க்கமாக சுமார் 1600 கி.மீ தூரம் பயணித்து இரதத்தில் வந்துள்ளான். இத்தனைக்கும் இவன் எருசலேமுக்குப் பணிந்து கொள்ளச் சென்றபோது உபாகமம் 23–ம் அதிகாரத்தின்படி **உரிமையோடு சபைக்குள்ளாகச் செல்ல இவனுக்கு அனுமதி இல்லை.** வெளியே தூரத்திலே நின்றுதான் தன் பக்திக் கடமைகளைச் செய்ய வேண்டும். ஆனால், அது தன் உயரிய அந்தஸ்துக்கு இழுக்கு என்றெல்லாம் அவன் நினைக்காதது ஆச்சரியமாக உள்ளது.

இவனுக்குள்ளாக ஆரம்பமுதல் இறைத்தேடல் என்பது நீறு பூத்த நெருப்பாக இருந்துள்ளதாகவே தெரிகிறது. எப்படியெனில், இவன் பிறப்பால் ஒரு யூதனல்ல. யூதரல்லாதவர்கள் புறவினத்தார்களே. புறவினத்தார்களுக்கும் எருசலேமுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. ஆயினும், பணிந்து கொள்ளும்படி இவன் எருசலேமுக்கு வந்துள்ளான் என்றால் அதற்கான காரணம் என்ன என்ற கேள்வி வருகிறது. அப்படித்தானே. இவன் தன் வாழ்வின் ஏதோ கட்டத்தில் யூத மதத்தின் நம்பிக்கையால் ஈர்க்கப்பட்டு அதைத் தழுவியிருக்கிறான். இப்படித் தன் பக்தி வாழ்வின் ஒரு நிலையிலிருந்து அடுத்த நிலைக்கு மாறியிருந்தாலும், அவனுக்குள்ளிருந்த அந்த இறைத்தேடல் தொடர்ந்து புழுங்கிக் கொண்டே இருந்துள்ளது. மனிதர் உள்ளத்திலிருப்பதை அறியும் தேவன் அதைக் கண்டார் [யோவான் 2:25].

எந்த ஓர் ஆத்துமாவும் கெட்டுப்போகக் கூடாது என்று தன் குமாரனுடைய வருகையைத் தாமதப்படுத்தும் தேவன் [II பேதுரு : 3:9]. இறைத் தேடலில் தணியாத தாகம் கொண்ட இந்த மந்திரிக்கான வாய்ப்பை நல்கச் சித்தம் கொண்டார். நற்செய்திப் பணியில் முழு மூச்சாக ஈடுபட்டிருந்த பிலிப்புவை **நீ எழுந்து தெற்கு முகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்துக்குப் போகிற வனாந்திர மார்க்கமாகப் போ** என்று பணித்தார் [8:26].தேவக்கட்டளையின் நோக்கமும், அவசரமும் அப்பொழுது பிலிப்புவுக்குப் புரிந்திருக்காது. ஆனால், தேவன் அறிவார். மந்திரி எருசலேமுக்கு வந்து பணிந்துவிட்டு நாடு திரும்பிக் கொண்டிருந்தான். ஒரு வேளை அவன் நாடு திரும்பிவிட்டால் அவனுக்கு நற்செய்தி சொல்ல அங்கு ஆள் இல்லை என்பதும் தேவனுக்குத் தெரியும். தேவனுக்குப் பயப்படுகிற உண்மையுள்ள ஆத்துமா நரகம் போவது தேவன் விரும்பும் ஒன்று அல்ல. ஆகவேதான், அந்த அவசரக் கட்டளை. தேவக்கட்டளையை ஏற்றுக்கொண்ட பிலிப்பு ஓடிப்போய் வனாந்திர மார்க்கமாகப் புழுதி கிளப்பி வந்த

இரதத்தோடு அழுக்கு மேனியோடு சேர்ந்த போது, அவன் ஏசாயா தீர்க்கதரிசனப் புத்தகத்தின் 53-ம் அதிகாரத்தை சத்தமாக வாசித்துக் கொண்டிருந்தான். என்ன மனிதனோ? பணிந்து கொள்ள எருச லேம் போனபோது வாசித்திருந்தால் அதைப் புரிந்து கொள்ள முடிகிறது. பணிந்து ஊர் திரும்பும்போதுமா? சரி, இந்தச் சூழலைத் தனக்கு சாதகமாக்கிக் கொண்ட பிலிப்பு ஊழியன், நீர் வாசிக்கிறவை களின் கருத்து உமக்குத் தெரியுமா? என்று கேள்வி எழுப்பி, அப்படியே தன் உரையாடலைச் சரியான திசையில் நகர்த்தி, வேத வாக்கியத்தை முன்னிட்டு **இயேசுவைக் குறித்து** அவனுக்குப் பிரசங்கித்தான் (அப் 8:35).

இயேசுவைக் குறித்த தன் பிரசங்கத்தில் அவனுடைய ஆத்தும இரட்சிப்புக்கான அனைத்தையும் பிரசங்கித்துள்ளான். ஆகவே தான் மந்திரி : **இதோ தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான்.** இன்று அநேகர் கூறுவதுபோல், இயேசுவைப் பற்றிய பிரசங்கத் தில் ஞானஸ்நானம் பற்றிய பேச்சே இருக்கக் கூடாது என்றால், பிலிப்பு ஒரு நல்ல பிரசங்கி அல்ல. அப்படியா? சரி, பிலிப்பு நீர் முழு இருதயத் தோடும் விசுவாசித்தால் **தடையில்லை** என்றவுடன் அவன்: **கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று அறிக்கை செய்தான்** (8:36,37) உடனே இரதத்தை நிறுத்தச் சொன்னான். பிறகு மந்திரி பிலிப்புடன் தண்ணீரில் இறங்கி, மந்திரிக்கு பிலிப்பு ஞானஸ் நானம் கொடுத்து, இருவரும் கரையேறினார்கள். அதன்பிறகு, மந்திரி அது வரை காணாத மகிழ்ச்சியோடு தன் நாட்டிற்குப் போனான் (8:38:39). இதன் மூலம் ஆப்பிரிக்கக் கண்டத்திற்கு முதல் கனி ஆனான். என்ன ஓர் ஆசீர்வாதம்!

சரி இப்பொழுது இம்மனமாற்ற சம்பவத்தில் பதுங்கியுள்ள பாடங்கள் என்னவென்று பார்ப்போம்.

### I. தேவனுக்கு ஒவ்வொரு ஆத்துமாவும் முக்கியம்

இரதத்தை நிறுத்தச்சொன்ன சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், பரலோக தேவனுக்கு ஒவ்வொரு ஆத்மாவும் முக்கியம் என்பது

**தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக் கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலக த்தில் அன்பு கூர்ந்தார்** ( யோவான் 3:16) என்று வாசிக்கிறோம். தேவன் உலகத்தில் இப்படியாக அன்பு கூர்ந்ததற்குக் காரணம், ஒருவரும் ஆன்மாவில் கெட்டுப் போகக்கூடாது என்பதுதான். ஏனெனில், ஆத்துமாவின் முக்கியத்துவம் குறித்து இயேசு

ஆண்டவர் இப்படியாகச் சொல்லியுள்ளார். **மனுசன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்தினாலும் தன் ஜீவனை நஷ்டப் படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுசன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?** (மத் 16:26) **என்று.**

ஆக, தேவன் நமக்குள்ளாக கொடுத்திருக்கும் விலையேறப் பட்ட ஆத்மாவை ஒருவேளை நாம் அசட்டையாக எண்ணினா லும், தேவப்பார்வையும், இயேசுவின் கூற்றும் வேறுவிதமாக உள்ளது. இப்படி ஒருவரும் கெட்டுப்போகக்கூடாது என்று எண்ணுகிற தேவன் உண்மையுள்ள, பக்தியுள்ள ஓர் ஆத்மா அழிந்து போவதை அனுமதிப்பாரா? நிச்சயம் இல்லை. உண்மை யுள்ளவனும், பக்தியுள்ளவனும் தேவனுக்கு பிரியமானவர்கள் (சங்கீதம் 4:3,7:10). அப்படிப்பட்டவர்கள் இரட்சிக்கப்படுவதற்கான சகல வழிகளையும் தேவன் ஏற்படுத்திக் கொடுக்கிறார். அப்போஸ் தலர் 10 ஆம் அதிகாரத்தில் நாம் காணும் கொர்நெலியு என்னும் நூற்றுக்கதிபதி இந்த இரகத்தைச் சேர்ந்தவனே. அந்த தேவன் தான் பக்தித் தேடலில் உச்சத்தை தொட்டுக் கொண்டிருந்த எத்தி யோப்பிய நிதி மந்திரியை சந்திக்க பிலிப்புவை பணித்தார். அதன் மூலம் அவன் தன்னை கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படுத்தி, தன் ஆத்துமாவை இரட்சித்தவனாக நாடு திரும்பினான்.

அன்பானவர்களே! நாம் ஒவ்வொருவரும் தேவப் பார்வையில் எப்படியாகக் காணப்படுகிறோம்? இந்த எத்தியோப்பிய மந்திரி போன்று இறைத் தேடல் உள்ள ஆத்துமாவாக பார்க்கப் படுகிறோமா? ஒருவேளை, தான் பிறந்து வளர்ந்த நம்பிக்கையும், தான் ஏற்கெனவே ஏற்றுக்கொண்ட நம்பிக்கையும் தான் சரி யானது என்று வாதிடும் மனமுடையவனாக இருந்திருந்தால், இவன் எவ்வளவு நல்லவனாக, பக்திச் செயல்பாடு உடையவானக இருந்திருந்தாலும் தேவப் பார்வையில் இரட்சிப்புக்கு உகந்த வனாகப் பார்க்கப்பட்டிருக்கமாட்டான். ஆகவே, தேவப் பார்வையில் நாம் இந்த எத்தியோப்பிய மந்திரி போல் சரியானதை ஏற்றுக் கொள்ளும் பக்திப் பக்குவம் உள்ளவர்களாகக் காணப்படு வது அவசியம். நாம் எப்படி என்பதை நிதானித்துக் கொள்ளுவோம்.

### II பக்தியுள்ளவர்களாக இருப்பது இரட்சிப்புக்கு ஈடாகிவிடாது

இரதத்தை நிறுத்தச் சொன்ன சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் அடுத்த பாடம், பக்தியாயிருப்பதே பரலோகத்திற்குப் போதுமானதல்ல என்பது.

கிறிஸ்தவ சமுதாயத்தில் இருக்கும் அநேகருடைய நினைப்பு இப்படியாக உள்ளது. நான் பக்திநிலையில் பாதுகாப்பாக இருக்கிறேன். என்னால் முடிந்த வரைக்கும் பக்திக் காரியங்களில் என்னை ஈடுபடுத்துகிறேன், நற்கிரியைகளில் குறை பெரிதாக வைப்பதில்லை. ஆகவே, பரலோகம் செல்ல எனக்குத் தடையேதும் இல்லை. நீங்கள் சொல்லுகிறபடி, கிறிஸ்துவின் உபதேசப்படி இரட்சிப்பு என்பதெல்லாம் அவசியமில்லை என்று எண்ணுகின்றனர். இந்த நினைப்பு அடியோடு தவறு என்பதை மந்திரியின் மனமாற்றச் சம்பவத்திலிருந்து நாம் அறிந்து கொள்ள முடியும்.

இந்த எத்தியோப்பியனைப் பொறுத்தளவில் நல்லவனாக மாத்திரமல்ல, பக்தியுள்ளவனாக இருந்துள்ளான். இறைத்தாகம் என்பது இவன் ஈன்றெடுக்கப்பட்ட நாளிலிருந்து இவனுக்குள்ளாக இருந்துள்ளதாகவே தெரிகிறது. ஆகவேதான், அவனுடைய படிப்பு, பதவி, அந்தஸ்து, அதிகாரம் என்று எல்லாவற்றையும் தாண்டி இறைத்தேடலில் ஈடுபட்டுள்ளான். ஒரு கட்டத்தில் தான் ஏற்றுக்கொண்ட புது நம்பிக்கையில் வெகு வைராக்கியமாகவும் இருந்துள்ளான். எல்லாவற்றைக் காட்டிலும் தேவ பக்திக்கான செயல்பாடு முக்கியம் என்ற உணர்வு இவனுக்கு உச்சந்தலையின் மேல் இருந்துள்ளது. அதினிமித்தமே இவன் பதவியின் பொறுப்புகளை துச்சமென மதித்து, போக, வர 3200 கி.மீ. தூரம் வனாந்திரத்தில் பயணித்துள்ளான். இப்படிப் பயணித்து எருசலேம் போய்ச் சேர்ந்தாலும், இவன் ஒரு யூதனைப்போல் தலை நிமிர்ந்து ஆலயப் பிரகாரங்களுள் சென்று, பக்தி காரியங்களை பகிரங்கமாகவும், படோடாபமாகவும் செய்ய இவனுக்கு அனுமதி இல்லை. ஏனெனில், இவன் யூதமார்க்கத்தமைந்தவன். இப்படித் தன் பக்திச் செயல்பாட்டில் தீப்பிழம்பாக இருந்தவனிடம் கொர்நெலிவு நடப்பித்த நற்கிரியைகளுக்கும் பஞ்சமிருந்திருக்காது (அப் 10:2) ஆயினும், **இவைகளனைத்தும் தேவப் பார்வையில் இரட்சிப்படைந்த நிலைக்கு ஈடாகப் பார்க்கப்படவில்லை.** ஆகவேதான், தன் ஊழியக்காரனாகிய பிலிப்புவை ஏவி இவன் இரட்சிப்பைக் கண்டுபிடிக்கும்படியான வழியை அறிந்து கொள்ளச் செய்தார்.

அருமையானவர்களே! கிறிஸ்துவின் உபதேசப்படி நாம் இரட்சிப்படைவதற்குப் பதிலாக, நம்மிடம் காணப்படும் சில பக்திச் செயல்பாடுகள் போதும் என்று எண்ணி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ள வேண்டாம். மறுபடியும் சொல்கிறேன். நாம் நினைப்பது போல் தேவன் நினைத்திருந்தால் பிலிப்புவுக்கு எத்தியோப்பியனிடம் எந்த வேலையும் இல்லை. ஒருவன் எப்படிப்பட்ட பக்திச் செயல்பாடு உடையவனாக இருந்தாலும், கிறிஸ்துவின்

உபதேசப்படி இரட்சிக்கப்பட வேண்டியது அவசியம். ஏனெனில், **அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை.** (அப் 4:12). இந்த எளிய உண்மையை நாம் ஒவ்வொருவரும் புரிந்து, அதற்காக என்ன செய்ய வேண்டுமென்பதைத் தெரிந்து புதிய ஏற்பாட்டில் உள்ள கிறிஸ்துவின் உபதேசச் சட்டங்களுக்கு நம்மைக் கீழ்ப்படுத்தி இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்று பரலோக பாக்கியத்தை உறுதி செய்வோம்.

**III சத்தியத்துக்கு கீழ்ப்படிய எதுவும் தடையாக இருக்கக் கூடாது**

இரதத்தை நிறுத்தச் சொன்ன சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், நற்செய்திக்குக் கீழ்ப்படிய எதுவும் தடையாக இருக்க அனுமதிக்கக்கூடாது என்பது.

புழுதிபடிந்த மேனியோடு பிலிப்பு, மந்திரியின் அழைப்பின் பேரில் அந்த மிடுக்கான இரதத்தில் ஏறி வேத வாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்துள்ளான் (அப் 8:35) எந்த வாக்கியத்தை முன்னிட்டு? பிலிப்பு காதில் விழும்படி சத்தமாக வாசித்தான் அல்லவா அந்த வேத வாக்கியத்தை முன்னிட்டு. அவன் வாசித்த வசனம், **அவர் ஒரு ஆட்டைப்போல அடிக்கப்படுவதற்குக் கொண்டு போகப்பட்டார். மயிர் கத்திரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக் குட்டியைப் போல அவர் தமது வாயைத் திறவாதிருந்தார். அவர் தம்மைத் தாழ்த்தினபோது அவருடைய நியாயம் எடுத்துப் போடப்பட்டது; அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுபோயிற்று. அவருடைய வம்சத்தை யாராலே சொல்லி முடியும் என்பதே** (ஏசாயா 53:7,8). இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டுத்தான் பிலிப்பு இயேசுவைக் குறித்து எத்தியோப்பியனுக்குப் பிரசங்கித்துள்ளான்.

அப்படியானால், என்ன பிரசங்கித்திருப்பான்? இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றி பிரசங்கித்திருப்பான். அது மட்டும் தானா? இல்லை. பாடுகளின் நோக்கம், உயிர்த்துப் பரமேறுவதற்கு முன் இயேசு கொடுத்த பிரதான கட்டளை, அதில் உள்ள உலகமெங்கும் போய் சகல ஜாதிகளுக்கும் நற்செய்தி அறிவித்து பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்தானம் கொடுங்கள் என்பது, இன்னும் இரட்சிப்புக்காக ஞானஸ் நானம் பெறுவதற்கு முன் ஒருவன் ஆவிக்குரிய ரீதியாகச், செய்ய வேண்டியது

என்னென்ன என்று கிறிஸ்து சம்மந்தப்பட்ட எல்லாவற்றையுங் குறித்துப் பிரசங்கித்திருப்பான். அப்படித்தானே! ஆகவேதான், பிலிப்புவின் இந்த ஆணித்தரமான பிரசங்கத்தை அப்படியே உள்வாங்கி தனது ஆன்மத் தேவை பற்றி ஆழமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கையில், தண்ணீரைக் கண்டவுடனே, தன்னையும் இழந்து **இதோ தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுவதற்குத் தடையென்ன என்றான்** ( அப் 8:36). அவன் எழுப்பின இக்கேள்வியில் ஒரு முக்கியச் செய்தி உள்ளது. **எதுவும் தடையாக இருக்க நான் அனுமதிக்கப் போவதில்லை** என்று சொல்லாமல் சொல்கிறான். இவனுக் காகத் தேவன் ஏன் இப்படிச் செயல்பட்டார் என்று இப்பொழுது புரிகிறதா? இவன் மந்திரி என்பதால் அல்ல. மாறாக, ஆன்மக் காரியங்களில் அனலு ள்ளவனாக இருந்தான் என்பதால் தான்.

ஆனால், இன்றைய கிறிஸ்தவத்தின் நிலை என்ன? கிறிஸ்து வுக்கும், அவருடைய உபதேசத்திற்கும் கீழ்ப்படிந்து, இரட்சிப் படைந்து, அவரால் கிறிஸ்துவின் சபைக்குள் சேர்க்கப்படுவதற்கு அந்த எத்தியோப்பியனுக்கு எதுவும் தடையாக இருக்கவில்லை. ஆயினும், அவன் அறியாத **ஒன்று** தடையாக இருக்கிற தென்று தேவ ஊழியனாகிய பிலிப்பு சொன்ன மாத்திரத்தில், ஆ, அப்படியா, இதோ அந்தத் தடையைத் தகர்க்கிறேன் என்பது போல, **இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசு வாசிக்கிறேன் என்று அறிக்கையிட்டு** இரதத்தை நிறுத்தும்படி கட்டளை கொடுத்தான். பிறகு, பிலிப்புவுடன் தண்ணீரில் இறங்கி ஞானஸ்நானம் பெற்று, **சந்தோஷத்தோடு தன் வழியே போனான்.** உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு என்று இயேசு சொன்னதைக் கேட்டு அதைச் சரி செய்ய மனமில்லாமல் **மனமடிந்து துக்கத்தோடே போன** அந்தப் பணக்கார வாலிபன் எங்கே? ( மாற்கு 10:17–22). இதுதான் **தடை** என்றவுடன் தகர்த்து எறிந்து கிறிஸ்துவுக்குத் தன்னைத் தாரைவார்த்துக் கொண்ட இந்த மந்திரி எங்கே?

அன்பானவர்களே! நாம் அந்தப் பணக்கார வாலிபன் போல் **போதகரே, இவைகளையெல்லாம் என் சிறு வயதுமுதல் கைக் கொண்டிருக்கிறேன்** (10:20) என்று சொல்வதால் எவ்விதப் பிரயோஜனமும் இல்லை. மாறாக, கருப்புத்தோல் எத்தியோப்பியன் போல் தடைகள் எதுவாக இருந்தாலும் அவை களைத் தூக்கி எறிந்துபோட்டு இரதத்தை நிறுத்து என்று கட்டளை யிட்டு பக்திப்பாதையில் தவறாகப் பயணிப்பதை உடனே நிறுத்தி, கிறிஸ்துவின் உபதேசத்துக்கு நம்மைக் கீழ்ப்படுத்துவோம். இதன் மூலம் மறுமையை இந்த எத்தியோப்பியனோடு சேர்ந்து தேவ சமூகத்தில் நித்திய நிதியமாய் கழிப்போம். ஆமென்! ஆமென்!!

# வேதாகமம் ஓர் அறிமுகம்

Bro. J.C. **சோட்**

**ந**ம் கரங்களில் தவழும் வேதபுத்தகம் புத்தகங்களின் புத்தகம் என்றழைக்கப்படுகிறது. ஏனென்றால், இது பல புத்தகங்களை உள்ளடக்கிய புத்தகமாயிருக்கிறது (வெளி.20:12).

வேதாகமம் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. ஏற்பாடு என்றால் உடன்படிக்கை என்னும் பொருள்படும். தேவன் மோசே மூலமாகத் தம்முடைய ஜனங்களோடு ஓர் உடன்படிக்கை பண்ணினார். பிற்பாடு தேவன் இயேசு கிறிஸ்து மூலமாக என்றென்றும் மாறாத நித்திய உடன் படிக்கையை ஏற்படுத்தினார் (கொரி.3; எபி.8:13;9:16,17;10;9).

பழைய ஏற்பாடு 39 புத்தகங்களையும், புதிய ஏற்பாடு 27 புத்தகங்களையும் சேர்த்து 66 புத்தகங்களை வேதாகமம் தன்னகத்தே கொண்டுள்ளது.

**பழைய ஏற்பாடு புத்தகங்களின் ஐந்து பிரிவுகள்**

| | |
|---|---|
| சட்டம் (5) | ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம். |
| வரலாறு (12) | யோசுவா, நியாயாதிபதிகள், ரூத், Iசாமுவேல், IIசாமுவேல், Iராஜாக்கள், IIராஜாக்கள், Iநாளாகமம், IIநாளாகமம், எஸ்றா, நெகேமியா, எஸ்தர். |
| பாடல் (5) | யோபு, சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு. |
| பெரிய தீர்க்கதரிசன புத்தகங்கள் (5) | ஏசாயா, எரேமியா, புலம்பல், எசேக்கியல், தானியேல் |
| சிறிய தீர்க்கதரிசன புத்தகங்கள் (12) | ஓசியா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக், செப்பனியா, ஆகாய், சகரியா, |

**புதிய ஏற்பாடு புத்தகங்களின் நான்கு பிரிவுகள்**

| | |
|---|---|
| வாழ்க்கை வரலாறு (4) | மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் |
| வரலாறு (1) | அப்போஸ்தலருடைய நடபடிகள் |

| | |
|---|---|
| நிருபங்கள் [21] | ரோமர், I கொரிந்தியர், II கொரிந்தியர், கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர், I தெசலோனிக்கேயர், II தெசலோனிக்கேயர், I தீமோத்தேயு, II தீமோத்தேயு தீத்து, பிலேமோன், எபிரெயர், யாக்கோபு, Iபேதுரு, IIபேதுரு, I யோவான் II யோவான், III யோவான், யூதா. |
| தீர்க்கதரிசனம் [1] | வெளிப்படுத்தின விசேஷம் |

**வேதாகமம் மூன்று காலங்களை தன்னகத்தே கொண்டுள்ளது.**

| | |
|---|---|
| பிதாக்களின் காலம் | இது ஆதாம் முதல் மோசே வரை உள்ள சுமார் 2500 வருடங்களை உள்ளடக்கிய காலகட்டமாகும். இக்காலகட்டத்தில் தேவன் முற்பிதாக்களினிடத்தில் நேரடியாகப் பேசினார். இச்செய்தியை முற்பிதாக்கள் தங்கள் குடும்ப அங்கத்தினர்களிடம், தங்களைச் சார்ந்தவர்களிடத்திலும் தெரிவித்தார்கள். |
| மோசேயின் காலம் [அ] யூதர்களின் காலம் | இது மோசேயின் முதல் காலம்கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் வரை உள்ள இக்காலம் சுமார்1500 ஆண்டுகள் வரை நீடித்தது. இக்காலகட்டத்தில் தேவன் நியாயப்பிரமாணத்தின் மூலமாகப் பேசினார். இந்த நியாயப்பிரமாணம் கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட போது முடிவுக்கு வந்தது [ கொலோ.2:14; மத்.5:17-19; லூக்கா. 24:44]. |
| கிறிஸ்துவின் காலம் | இக்காலம் கிறிஸ்துவின் மரணத்திலிருந்து ஆரம்பமானது. இது கிறிஸ்துவின் வருகை வரை நீடித்திருக்கும். இக்காலம் கடந்த ஈராயிரம் ஆண்டுகளாக இருந்து வருகிறது. இது காலத்தின் அடிப்படையில் பார்த்தால் கடைசி காலமாகும். இக்காலகட்டத்தில் தேவன் தம்முடைய வார்த்தையின் மூலமாக மனிதர்களிடத்தில் பேசிக்கொண்டிருக்கிறார் [யோவான் 20:30, 31; II தீமோ.3:16,17]. |

- பிதாக்களின் காலம், நட்சத்திர ஒளியின் காலம் என்றழைக்கப்படுகிறது. ஏனென்றால், இக்காலகட்டத்தில் குறைவான ஒளியே கொடுக்கப்பட்டது.
- மோசேயின் காலம், நிலவொளியின் காலம் என்றழைக்கப்படகிறது. ஏனென்றால், இக்காலகட்டத்தில் சற்று கூடுதலான ஒளி கொடுக்கப்பட்டுள்ளது.
- நிறைவாக, கிறிஸ்துவின் காலம் சூரிய ஒளியின் காலம் என்றழைக்கப்படுகிறது. ஏனென்றால், இக்காலகட்டத்தில் இயேசுகிறிஸ்து மூலமாக முழுமையான ஒளி கொடுக்கப்பட்டது.

வேதாகமத்தை நாற்பது தேவதாசர்கள் சுமார் 1600 வருட கால இடைவெளியில் எழுதினார்கள். இந்த எழுத்தாளர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு வேதவாக்கியங்களை எழுதியிருக்கிறார்கள். இவர்கள் அந்தந்தக் காலகட்டங்களிலிருந்த வேலைகளைச் செய்கிறவர்களாயிருந்தார்கள்.

இவர்கள் உலகின் பல பகுதிகளில், பல்வேறுபட்ட சூழ்நிலைகளில் வாழ்ந்தார்கள். இந்த எழுத்தாளர்களெல்லாம் ஒரு வரையெருவர் அறியாதவர்களாயிருந்திருந்தார்கள். இருந்த போதிலும், இவர்களுடைய எழுத்துக்களிலோ, கருத்துக்களிலோ எவ்வித முரண்பாடுமில்லை. ஆகையால், மனித இனத்தின் ஒட்டு மொத்த வரலாற்றிலும் தேவன் மனிதனோடு எப்படி இடைப் பட்டார் என்பதையும் வேதாகமம் தெளிவாகத் தெரிவிக்கிறது.

பழைய ஏற்பாடு எபிரெய மொழியில் எழுதப்பட்டது. புதிய ஏற் பாடு கிரேக்கம் மற்றும் அராமிக் மொழியில் எழுதப்பட்டது. இவை களையெல்லாம் தேவனுடைய மனிதர்கள் பரிசுத்த ஆவி யினாலே ஏவப்பட்டு எழுதினார்கள் [IIபேதுரு 1:21; IIதீமோ.3:16,17].

வேதாகமம் தேவனுடைய வார்த்தைகளை உள்ளடக்கிய ஒரு புத்தகமாகும் [எபி.1:1,2]. இதோடு நாம் ஒன்றையும் சேர்க்கவும் கூடாது, இதிலிருந்து ஒன்றையும் கழிக்கவும் கூடாது. இதற்குப் பதிலாக வேறெதையும் வைக்கவும் கூடாது [வெளி.22:18,19; கலா.1:7-9; உபா. 4:2; நீதி. 30:6]. மேலும், வேதவாக்கியங்களை நமக்குத் தருவதற்கு மாத்திரமல்ல, அதைப் பாதுகாப்பதற்கும் தேவனுக்கு வல்லமை உண்டு [I பேதுரு 1:25; மத். 24:35]. முடிவாக, ஒட்டு மொத்த மனித இனமும் கர்த்தருடைய வார்த்தையால் நியாயந்தீர்க்கப்படும் [யோவான் 12:48]. ✝

## கிறிஸ்துவைத் தரித்துக் கொள்பவர்

- ✿ மேலானவைகளை நாடுகிறவர்களாக இருக்கிறார். [ கொலோ 3:1,2]
- ✿ மற்றவர்களின் பாரத்தைச் சுமந்து, கிறிஸ்துவின் பிரமணத்தை நிறைவேற்றுகிறவராக இருக்கிறார் [கலாத்தியர் 6:2]
- ✿ ஆவியின் கனிகளை பிரயாசப்பட்டுக் கொடுக்கிறவரா யிருக்கிறார் [கலாத்தியர் 5:22,23]
- ✿ வாழ்க்கையில் தேவனுக்கு முதலிடத்தைக் கொடுக்கிற வராயிருக்கிறார் [மத்தேயு 6:33]

பெண்கள் பகுதி

# இல்லை

SiS. **ரேச்சல் நாயகம்**

**ஒ**ருமுறை, பத்திரிக்கை ஆசிரியர் ஒருவர் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களை அழைத்து பல கேள்விகளுக்கு பதில் சொல்லுமாறு கேட்டார். அக்கேள்விகளுள் கீழ்க்கண்ட இரண்டு கேள்விகளும் அடங்கும்.

1. பெருமளவில் தவறாக பயன்படுத்தக்கூடிய வார்த்தை எது?

2. ஆங்கில மொழியிலே அதிகமாக பயன்படும் என்று கருதக்கூடிய வார்த்தை எது?

பெரும்பாலும் அனைவராலும் தவறாக பயன்படுத்தப்படும் வார்த்தை, **ஆம்** என்றும், அதிகமாக பிரயோஜனப்படும் வார்த்தை **இல்லை** என்றும் கூறினார்கள்.

இல்லை என்ற சொல்லை சொல்லத் தவறினதினால் இன்றைக்கு சபைகள் உடைந்தும், ஊழியர்கள் இடமாற்றம் செய்வதும், சபைக்கு ஒருவர் வருவதும், ஒருவர் போவதுமாக நிலைமை இருக்கிறது. எந்த ஒரு ஸ்தாபனமாக இருந்தாலும் ஒரு கூட்ட மக்களைப் பிரியப்படுத்த ''ஆமாம்'' என்று சொல்லும்போது கட்டாயமாக அங்கே பிரச்சனைதான் வந்து சேருகிறது. ஆரம்பத்திலேயே ''இல்லை என்று சொல்லிவிட்டால் பிரச்சனைகளை தவிர்க்கலாம்.

இல்லை என்பது சிறிய வார்த்தையாயிருந்தாலும் பெரிய பொருளைக் கொண்டுள்ளது. பெரிய மனிதர்கள்தான் இந்த வார்த்தையை செயல்படுத்த முடியும். இல்லை என்று சொல்லத் தெரியாத குணத்தைப் பெற எந்த மனிதனும் கஷ்டப்பட வேண்டிய அவசியமில்லை . உலகம் முழுவதும் அறியப்பட்டிருக்கிற மாமனிதர், மிகத் தெளிவாகவும், எந்தத் தவறுமின்றி, தான் வாழ்ந்த காலத்திய சில மக்கள் செய்யத் தவறியதை தன் சொல்லால் செய்து காட்டினார். அவர் தான் இயேசு கிறிஸ்து. (மத்தேயு 4:1-11) வசனப்பகுதிகளில் தன்னை சோதித்த பிசாசுக்கு ''இல்லை'' என்று சவுக்கடி கொடுத்தார்.

நாமும் கூட பிசாசுக்கு இல்லை என்று சொல்லக் கற்றுக் கொள்ள வேண்டும். இப்படிப் பழகுவது நமக்கு ஒரு பலமுள்ள ஜீவியத்தை கொடுக்கும். பழைய ஏற்பாட்டில் சிம்சோன் இதற்கு உதாரணமாக திகழ்கிறான். (நியாயாதிபதிகள் 16 ம் அதிகாரம்).

மீண்டும், மீண்டும், மீண்டுமாக அவன் ''இல்லை '', ''இல்லை '', ''இல்லை என்று சொன்னதினால் அவன் பலம் அவனோடவே இருந்தது. ஆனால் தெலீலாள் என்று சொல்லக்கூடிய பெண்ணின் நெருக்குதலுக்கு பலியான சிம்சோன் இல்லை என்று சொல்லாமல், ''ஆம்'' என்று சொன்னபோது தன் பலத்தின் இரகசியத்தை வெளிப்படுத்தி தன் பலத்தை இழந்து போனான். இன்றைக்கும் இராட்சமனதும், உயர்ந்த சரீரமும், அகன்ற தோள்களையும் கொண்ட மனிதர்கள் கூட ''இல்லை'' என்ற வார்த்தைக்கு பதிலாக ''ஆம்'' என்று சொல்லித் தங்கள் முழு பலத்தையும், மரியாதையையும் இழந்து விட்டிருக்கிறார்கள்.

ஆதியில் ஏதேன் தோட்டத்திலேயே இப்பலவீனம் துவங்கி விட்டது. தவற்றிற்கு **ஆமாம் சாமி** போட்டார்கள். ஆதாமும், ஏவாளும். பிறகு வெட்கப்பட்டார்கள். பிறகு தங்களை ஒளித்தார்கள். வெட்கம் – சுயமரியாதையை இழக்கச் செய்கிறது. பின்பு தானாக ஒளித்துக் கொள்ளும் சூழ்நிலை வந்து விடுகிறது. இது தலைமுறை, தலைமுறையாக தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கிறது. இவைகளெல்லாவற்றிற்கும் காரணம் அவன் இல்லை என்ற சொல்லை பயன்படுத்தாதது தான்.

ஓர் அடிமையின் **இல்லை** என்ற சொல் அவன் எஜமானின் குடும்பத்தை காப்பாற்றியது. (ஆதி 39:7–10). யோசேப்பு அடிமை யாயிருந்தான். போத்திபார் எஜமானாயிருந்தான். இளமையான, மிகவும் அழகான, திறமை வாய்ந்த யோசேப்பு தன் சகோதரர்களின் பொறாமைக்கு ஆளாகி அடிமையாக விற்கப்பட்டான். அவனுக்கே உண்டான சில விசேஷ குணநலத்தால் மதிப்பும், நம்பிக்கைக்குரிய ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டான். பிறகு பார்வோனின் மனைவி யோசேப்பின் மேல் கண்போட்டு தன்னோடே தகாத உறவு வைக்கத் தூண்டினாள். யோசேப்பு தன் எஜமானுக்கும், தேவனுக்கும் உண்மையுள்ளவனாய் நடந்து கொண்டான். பார்வோனின் மனைவி பழியை யோசேப்பின் மேல் போட்டு குற்றம் சாட்டினதால் சிறைக்கு தள்ளப்பட்டான். ஆனால் யோசேப்பு தோற்கடிக்கப்படவேயில்லை. தேவனுடைய உதவி யால் எகிப்து முழுமைக்கும் பார்வோனுக்கு அடுத்த இரண்டாம் ஸ்தானத்துக்கு உயர்த்தப்பட்டான். யோசேப்பின் வாழ்க்கையின் திருப்புமுனைக்கு காரணம் அவனது உறுதியான ''**இல்லை** என்ற சொல் தான்.

மேலும், புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலனாகிய யோவான் மிகவும் கண்டிப்பாக ''இல்லை'' என்று சொல்லக் கூடியவர்.

III யோவான் 9,10,11 வசனங்களில் பார்க்கும் போது தியோத்திரேப்புவை கடுமையாக எதிர்க்கிறார். அப்போஸ்தலர் யோவான் ஆமாம் சாமி போடுகிறவர் அல்ல. அவனை கடுமையாக விமர்சித்து விட்டு, பிறகு பிரியமான காயுவுக்கு ''நீ தீமையானதைப் பின்பற்றாமல், நன்மையானதைப் பின்பற்று என்று உற்சாகப் படுத்துகிறார். இதையே வேறுவகையாகச் சொன்னால், தீமைக்கு ''**இல்லை**'' என்றும், நன்மைக்கு ஆம் என்றும் சொல்ல வேண்டும் என்பதை அப்போஸ்தலன் யோவான் மூலம் நாம் கற்றுக் கொள்கிறோம்.

ரோம அரசாங்கத்தின் ஆளுநராக இருந்த பிலாத்து இரத்த வெறிபிடித்த, கெர்ஜித்துக் கொண்டிருக்கும் ஜனத்திரளுக்கு முன்பாக ''இல்லை'' என்று சொல்ல பயந்து ''ஆம்'' சிலுவையில் அறையுங்கள் என்று தன் கையை கழுவி விட்டான். (மத் 27:24). ஆமாம் என்று சொன்னதினால் இன்றளவும் இவன் பெயர் இழிவான பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

**இல்லை** என்ற ஒரு சொல்தான் **ஆம்** என்ற வார்த்தைக்கு பலம் சேர்க்கிறது. **இல்லை** என்ற சொல்லால் நாம் ஆக்கப் பட்டாலேயொழிய **ஆம்** என்ற சொல்லுக்கு மதிப்பே இல்லை. ஒரு மனிதன் எந்த அளவு சாமர்த்தியவான் என்பதை அவன் எந்த அளவு தீமைக்கு ''இல்லை என்ற சொல்லை பயன்படுத்து கிறானோ அதை வைத்து கணித்து விடலாம். சங்கீதக்காரன் இவ்வாறு சொல்கிறான். ''....எல்லாப் பொய் வழிகளையும் வெறுக்கிறேன்'' (சங்கீதம் 119:104). இது உண்மையிலும் உண்மை. ஏனென்றால், இவன் ஒவ்வொரு உண்மையான வழியையும் நேசித்தான்.

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரிகளே! அருமையான பாடம் நமக்கு கிடைத்திருக்கிறது. தேவன் சம்பந்தமான காரியங்களுக்கு ஆம் என்றும், பிசாசின் காரியங்களுக்கு இல்லை என்றும் சொல்வோம். வேதம் பேசுவதற்கு ''ஆம்'' என்போம். வேதம் பேசாத இடத்தில் **இல்லை** என்போம்.

நம்முடைய ஆத்துமாக்கள் வலுவுள்ளதாயிருக்க இல்லை '' களை அதிகம் பயன்படுத்துவோம். அதன் மூலம் **ஆமா** க்களை இல்லைகளால் பலப்படுத்துவோம் – ஆமென்.

வாலிபர் பகுதி

## தேவன் எல்லாச் சூழலுக்கும் ஏற்றவர்!

**Dr. ஏபில் நாயகம்**

பிரியமான வாலிபர்களே! உங்கள் யாவருக்கும் இயேசுவின் இன்ப நாமத்தில் வாழ்த்துக்கள். மீண்டும் இவ்விதழின் வழியாக உங்களைச் சந்திப்பதில் எனக்கு மகிழ்ச்சி.... நான் எந்த நிலையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக் கொண்டேன் என்று பவுலடியார் பிலிப்பின் 4:11 ல் சொல்வதை நீங்கள் கவனித்து இருப்பீர்கள். இந்த சிந்தையைப் பற்றித்தான் இம்மாதம் தியானிக்கப் போகிறோம். இது ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் இருக்க வேண்டிய சிந்தை. ஆனால், இச்சிந்தையை யாரும் எளிதில் பெற்றுவிட முடியாது. ஏன் என்ன செய்ய வேண்டும் என்று வேதத்தின் துணையோடு தேடுவோம்.

பவுலடியார் பெற்றுக்கொண்ட இந்த மேலான சிந்தை இன்றைய நடைமுறை வாழ்க்கைக்கு சாத்தியமில்லை என்று பலர் எண்ணக் கூடும்.

மனரம்மியமாய் என்று தமிழில் எழுதப்பட்டுள்ள வார்த்தைக்கு ஆங்கில வேதாகமத்தின் NKJV Verson ல் Content என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் அர்த்தம் போதுமென்ற மனதுடன் இருப்பது அல்லது எந்நிலையிலும் மனநிறைவாய் இருப்பது ஆகும். நாம் சந்தோஷமாய் இருக்கும்போதும் நாம் நினைப்பது எல்லாம் நடந்தேறிக் கொண்டிருக்கும் சமயங்களிலும் மனநிறைவாய் இருப்பது சுலபம். அதற்காக எந்த ஒரு முயற்சியும் எடுக்கத் தேவையில்லை. இயல்பாகவே அச்சிந்தை வந்துவிடும். ஆனால், சோர்வான நேரங்களில், நினைத்தவைகள் நடக்காமல் போகும் தருணங்களில் மனநிறைவைப் பெற்றுக்கொள்ள நம்மால் முடிகிறதா? பெரும்பாலான நேரங்களில் பதில் இல்லை என்றுதான் இருக்கும். சற்று கடினம்தான். ஆனால், பவுலடியார் எந்நிலமையிலும் மனநிறைவாய் இருந்திருக்கிறாரே! அப்படியானால், அது சாத்தியமானது என்று தானே அர்த்தம், என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய என்னால் முடிகிறது என்று சொல்லி, கிறிஸ்துவை தன் பெலனாகச் சொல்கிறார்

எந்நிலையிலும் மனநிறைவாய் இருக்க வேண்மேயானால் தேவன் மீது அபாரமான நம்பிக்கை வேண்டும். நம் வாழ்வின் எல்லா அங்கங்களிலும் தேவனை நாம் மையப்படுத்த வேண்டும்.

நம் வாழ்வின் சூழ்நிலைகள் எப்படியிருந்தாலும் தேவன் சகலத்தையும் அவர் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார். என்று நாம் நினைக்க வேண்டும். சந்தோஷமான சூழ்நிலையோ சோர்வான சூழ்நிலையோ, நம் வாழ்வின் சூழ்நிலை எவ்வாறாக மாறினாலும் தேவன் மாறாதவர் என்கிற சிந்தையை நாம் பெற வேண்டும். மனநிறைவு என்பது **தேவன் எனக்கு போதும்** என்ற புரிதலின் வெளிப்பாடு ஆகும். அந்தப் புரிதல் சூழ்நிலைகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும்.

தானியேல் புத்தகத்தின் 3-ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கும் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் எந்நிலையிலும் மனநிறைவாகத்தானே இருந்தார்கள்? அப்படியானால், ஒரு உண்மை புலப்படுகிறது. தேவனை முழுவதுமாக புரிந்த மனிதர்களாலே, இந்த சிந்தையை பெற்றுக் கொள்ளமுடிகிறது.

எனவே, தம் பக்கம் இருக்கும் சிந்தையை நாம் பழுது பார்த்து சரிசெய்யவேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். ஏனென்றால், கிறிஸ்தவ வாழ்க்கை என்பது போராட்டம் நிறைந்த ஒன்றாகவும் கடினமான சூழ்நிலைகளை எதிர் கொள்கிற ஒரு வாழ்க்கை யாகவும் இருக்கிறது. இதனால் பல நேரங்களில் நாம் மனநிறை வோடு இருக்க முடியாமல் போய்விடுகிறது. மனநிறைவோடு மனரம்மியமாய் வாழ சில உண்மைகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். தானியேல் 3ம் அதிகாரத்திலிருந்து சில பாடங்களைக் கற்றுக் கொள்வோம்.

**நாடும், அரசாங்கமும் மறுத்தாலும் தேவன் தேவனே!**

ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் அறுபது முழமான பொற் சிலையை உண்டு பண்ணி நிறுத்தினான். கீதவாத்தியங்கள் வாசிக்கப்படும் பொழுது அனைவரும் தாழ விழுந்து அந்தப் பொற் சிலையை வழிபட வேண்டும் என்று கட்டளையிட்டான். வழிபடாதவர்கள் அக்கினியிலே போட்டப்படுவார்கள் என்றும் கட்டளையிட்டான். பாபிலோனின் ராஜாவும் அவரின் அரசாங்கமும் மெய் தேவனின் மகத்துவத்தையும் வல்லமையையும் உணராமல், அவரைத் தேட மனதில்லாமல் விக்கிரகங்களை உண்டாக்கினார்கள்.

இது நாம் வாழும் சூழ்நிலைக்கு ஒத்ததாகவே இருக்கிறது. கிறிஸ்தவத்திற்கும், கிறித்தவர்களுக்கும் சாதகமில்லாத நாட்களில் நாம் வாழ்கிறோம். இப்படிப்பட்ட சூழலில் தேவனுடைய பிள்ளைகள் இருப்பதும், தேவ மனிதர்கள் இருப்பதும் ஒன்றும் புதிதல்ல.

சாதிராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களின் மன நிலையை கவனிக்க தவறிவிடக்கூடாது. ராஜா பொற்சிலையை

நிறுவினாலும், அதை தாழவிழுந்து பணிந்து கொள்ள உத்தரவு வந்தாலும், அந்த உத்தரவுக்கு அந்த நாட்டின் மக்கள் அனைவரும் செவி கொடுத்து பணிந்தாலும், அது எங்களை பாதிக்காது என்ற நிலையை அவர்கள் பெற்றிருந்தார்கள். தாங்கள் சேவிக்கும் தேவன் இப்படிப்பட்ட காலத்துக்கும் தேவனாக இருக்கிறார் என்பதை புரிந்திருந்தார்கள். அவர்கள் விரும்பாத சூழலில் வாழ்ந்தாலும் மனநிறைவை அவர்கள் பெற்றிருந் தார்கள்.தேவன் அறிவார் என்றும் அவர் கட்டுப்பாட்டிற்குள் வைத் திருக்கிறார் என்றும் அவர் போதும் என்றும் அவர்கள் நினைத் தாலேயே அவர்களால் அந்த நிறைவோடு இருக்க முடிந்தது.

வாழ்க்கையின் எந்த சூழலிலும் தேவன் மாறாதவர் என்றும், தேவன் தேவனாகவே எப்பொழுதும் இருக்கிறார் என்கிற புரிதலோடும் நாம் இருக்க வேண்டும்.

**நாம் உறுதியான நம்பிக்கையோடு இருக்கும் பட்சத்தில், நமக்கு பிரச்சனைகள் வருமாயின், அப்போதும் தேவன் தேவனாகவே இருக்கிறார்.**

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகே, என்பவர்கள் நேபுகாத் நேச்சாரின் ஆணைக்கு கீழ்ப்படியாமல் போனதினால் அவர்களை அக்கினி சூளையிலே பேட ஆணை பிறப்பிக்கப்பட்டது.

அந்த நிலையிலும் அவர்களின் உறுதியை நாம் கவனிக்க வேண்டும். 3ம் அதிகாரம் 17,18 ல் ...விடுவிப்பர். விக்காமற் போனாலும் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வது மில்லை. நீர் நிறுத்தின பொற்சிலையை பணிந்து கொள்வது மில்லை என்று கூறினார்கள். அக்கினி சூளையிலே தண்டனை கிடைக்கும் என்ற நிலை வந்த போதும், அவர்களின் உறுதியை நாம் கவனிக்க வேண்டும். அவர்களின் சூழல், தேவனின் தன்மையை கேள்விக்குறியாக மாற்றவில்லை. மாறாக, அவர் களின் நிலைப்பாடு தேவனின் தன்மையை உறுதியாக்கினது.

பிரியமானவர்களே! அப்படிப்பட்ட கண்ணோட்டம் நமக்கு வேண்டும். எந்த நிலையிலும் மனரம்மியமாய், மனநிறைவாய் இருக்க இந்த உண்மையை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். நம் வாழ்வின் சூழல் எவ்வாறாக இருந்தாலும் தேவன் மாறாதவர். தேவன் நிலையானவர். நம் வாழ்வின் தன்மையை கேள்விக் குறியாக்க முடியாது. தேவன் எப்பொழுதும் தேவனாகவே இருக்கிறார். இந்த புரிதலோடு நாம் வாழ முயற்சிப்போம். பவுலடி யாரைப் போல மனரம்மியமாய், மனநிறைவோடு வாழ்வோம். ஆமென்.

சிறுவர் பகுதி

# காணாமல் போன ஆடு

Dr. ப்ரைசி ஏமில் நாயகம்

அன்புக் குழந்தைகளே! உங்கள் வீடுகளில் பெற்றோர் களுக்குப் பெரிதாகத் தொந்திரவு கொடுக்காமல் நலமாகவும் சிறப்பாகவும் இருப்பீர்கள் என நம்புகிறேன்.



இம்மாதம் லூக்கா 15:4–7 வசனங்களில் காணப்படும் இயேசுவின் உவமைகளில் ஒன்றாகிய **காணாமல் போன** ஆடு பற்றி நாம் படிக்கப் போகிறோம். அநேகராகிய உங்களுக்கு இந்த உவமை ஏற்கனவே தெரிந்திருக்கக்கூடும். இருப்பினும் மறு படியும் ஒருமுறை படிக்கும் படியாக உங்களைக் கேட்கிறேன். அப்படிப் படிப்பதின் மூலம் நாம் யார் என்றும், ஒரு தேவனுடைய பிள்ளையாக நாம் என்ன செய்யலாம், என்ன செய்யக் கூடாது என்றும் தெரிந்து கொள்ளலாம்.

பிள்ளைகளே! எல்லோரும் தவறு செய்கிறோம். ஆயினும், ஒன்றை நாம் நினைவில் கொள்ள வேண்டும். செய்த தவறுக்காக மனம் வருந்தி, மனம் திரும்புவோமானால் மன்னிப்பதற்கு நம் தேவன் எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கிறார். தேவனுடைய பிள்ளைகளாக குற்றமற்றவர்களாகவும், தவறுக்கு விலகியிருந்து எப்போதும் நல்லவர்களாக இருக்க வேண்டும். இழந்து போன ஓர் ஆட்டை அந்த மேய்ப்பன் எப்படித் தேடினானோ அது போல் அதிக அக்கறையுடன் தேவன் உன்னைத் தேடுகிறவராக இருக்கிறார். நாம் மனந்திரும்புவோமானால் நம்மை மன்னித்து ஏற்றுக் கொண்டு நம்மோடு சேர்ந்து மகிழ்ச்சி கொள்கிறார்.

அன்புப் பிள்ளைகளே, நீங்கள் தவறு செய்கிறவர்களாக மாறி, அந்த ஆட்டைப் போல் உங்கள் குடும்பத்திலிருந்தும், சபையிலிருந்தும் நீங்கள் தொலைந்து போக வேண்டாம். உங்கள் தவறுகளை உணர்ந்து, தேவனிடமாகத் திரும்பி, அவரிடத்தில் மன்னிப்புக்கோரி, தேவன் மகிழ்ச்சியடைந்ததக்க அளவில் எப்போதும் நல்லவர்களாக வாழ்வோம்.

கர்த்தருக்குள் எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருங்கள். மறுபடியும் சொல்கிறேன், கர்த்தருக்குள் எப்போதும் மகிழ்ச்சியாயிருங்கள்.

**மிகுந்த அன்புடன்**
**ப்ரைசி அக்கா.**

**கேள்விகள்**

1. **உவமை என்றால் என்ன?**
2. **எத்தனை ஆடுகள் பாதுகாப்பாய் இருந்தன?**
3. **எத்தனை ஆடுகள் காணாமல் போனது?**
4. **காணாமல் போன ஆட்டை கண்டுபிடித்த பின் மேய்ப்பன் யாரையெல்லாம் அழைத்து சந்தோஷப்பட்டார்?**
5. **ஒரு பாவி மனந்திரும்பும் போது பூலோகில் என்ன நடக்கிறது?**

## இயேசுவின் மரணத்தால் நடந்தவைகள்

1. யூதர்களையும், புறஜாதிகளையும் ஒப்புரவாக்கினார்.
(எபேசியர் 2 :16)

2. பாவங்களை நிவர்த்தி செய்யும் கிருபாதார பலியானார்.
(I யோவான் 4:10)

3. புதிய பிரமாணத்தை நிலைநிறுத்தும் படியால், பழையதை மாற்றிப்போட்டார்.
(எபிரெயர் 9:15-17; மத்தேயு 26:28).

4. சாத்தானின் வல்லமையை அழித்தார்.
(எபிரெயர் 2:14 ;I யோவான் 3:8)

5. மரண பயத்திலிருந்த அனைவரையும் விடுதலையாக்கினார்.
(எபிரெயர் 2:15)

# வெளிப்படுத்தின விசேஷம்

## அதிகாரம் 1

Bro. **ஜேம்ஸ் ராஜ்குமார்**

48 ஏன் சபையை பொன் குத்து விளக்கிற்கு ஒப்பிடுகிறார்?

**பதில்:** சபை விசுவாசத்திலும், சத்தியத்திலும், நடக்கையிலும் தரமானதாகவும், கிறிஸ்துவை பிரதிபலிக்கிறதிலே வெளிச்சமாகவும் இருக்க தேவன் விரும்புகிறார், 1 பேது. 1:7; மத். 5: 14-16; யோபு 23:10.

49 இயேசுவானவர் தம் வலது கரத்தில் ஏந்திக்கொண்டிருந்தது என்ன? வெளி.1:16, 20,

**பதில்:** ஏழு நட்சத்திரங்கள்.

50 இந்த ஏழு நட்சத்திரங்கள் எதைக்குறிக்கிறது? வெளி. 1: 16, 20.

**பதில்:** இந்த ஏழு நட்சத்திரங்கள் ஏழு சபைகளுக்கு அனுப்பப்படும் ஏழு தூதர்களைக் குறிக்கிறது.

51 இயேசுவினுடைய வாயிலிருந்து புறப்பட்டது என்ன? அது எதைக் குறிக்கின்றது? வெளி. 1:16.

**பதில்:** அவருடைய வாயிலிருந்து புறப்பட்டது இருபுறமும் கருக்குள்ள பட்டயம். இது தேவனுடைய வார்த்தையைக் குறிக்கின்றது, எபி. 4:12; எபே. 6:17.

52 இயேசுவினுடைய முகம் சூரியனைப்போல பிரகாசித்த இன்னொரு நிகழ்ச்சி எது? வெளி. 1:16.

**பதில்:** மத்தேயு 17 ம் அதிகாரத்தில் காணமுடியும், மத். 17:1-7; 2 பேது. 1:17, 18.

53 கிறிஸ்துவைக் கண்ட யோவானுக்கு நடந்தது என்ன? வெளி.1:17.

**பதில்:** யோவான் அவரைக் கண்டபோது செத்தவனைப்போல அவருடைய பாதத்தில் விழுந்தேன் என்கிறார். இது இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும் அவர்மேல் வைக்க வேண்டிய பயத்தையும் நமக்கு உணர்த்துகிறது.

54 அப்பொழுது ஆண்டவர் யோவானுக்குச் செய்தது என்ன? வெளி. 1:17.

**பதில்:** அப்பொழுது ஆண்டவர் தம்முடைய வலதுகரத்தை யோவான்மேல் வைத்து, யோவானை நோக்கி: பயப்படாதே, நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமா யிருக்கிறேன் என்றார்.

55 மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன் என்பதை விவரிக்கவும்! வெளி. 1:18.

**பதில்:** a). இயேசுகிறிஸ்து ஒருதரம் மனிதனாக வந்து மரித்தார், இனிமேல் அவர் மனிதனாக பூமியில் வரமாட்டார், எபி. 9:27.

B). அவர் மீண்டும் மரணத்தை சந்திக்காதபடி உயிர்த் தெழுந்தார், ரோம. 6:9. இனிமேல் இயேசு கிறிஸ்துவுக்கு மரணமேயில்லை.

56 இயேசுவானவர் எவைகளுக்குரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறார்? வெளி. 1:18.

**பதில்:** a). மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவு கோல்களை உடையவராயிருக்கிறார்.

b). அவர் பரிபூரண நீதியுள்ளவர் ஆகையால் மரணம் பாதாளம் அவரைக் கட்டிவைக்க முடியாது, அப். 2:24; எபி. 5:8, 9; 2 : 14; 1 கொரி. 15 : 54, 55; ரோம. 8:3.

c). மேலும் கிறிஸ்து மரணம் பாதாளத்தின் மேல் முழு அதிகாரம் உடையவராக இருக்கிறார்.

57 எவைகளை எழுதும்படி யோவானுக்கு இயேசுவானவர் கட்டளையிட்டார்? வெளி 1:19.

**பதில்:** கண்டவைகளையும், இருக்கிறவைகளையும், இவை களுக்குப் பின்பு சம்பவிப்பவைகளையும் எழுத வேண்டும் என்று கட்டளையிட்டார்.

58 யோவான் கண்ட ஏழு நட்சத்திரங்கள் ஏழுபொன் குத்துவிளக்குகள் யார் கையில் இருந்தது அவைகளின் இரகசியம் என்ன? வெளி.1:20)

**பதில்:** யோவான் கண்ட ஏழுநட்சத்திரங்கள் ஏழு பொன்குத்து விளக்குகள் இயேசு கிறிஸ்துவின் கையில் இருந்தது; அந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்கள்; ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகள்.

# சாந்தகுணத்தில் தலைசிறந்தவளின் கோபம்!

Bro. **பாண்டியன்**

**தே**வனால் பாதுகாக்கப்பட்ட அன்பு சகோதர, சகோதரிகளுக்கு ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். தினந்தோறும் வேதம் ஆராய்ந்து பெரோயா பட்டணத்தார் நற்குணசாலிகளானதைப் போல நாமும் மாற வேண்டும் என்பதே தேவ சித்தம். சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் என்று சொன்னதோடு மாத்திரமல்ல, அப்படியாக வாழ்ந்த இயேசுவானவர், **நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன், என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள்** என்றும் வழி சொன்னார். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த சாந்த குணத்தில் உலகத்திலேயே **சிறந்த மனிதன்** யார் என்றால் அவர்தான் **மோசே** என்கிறது வேதம். மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்த குணமுள்ளவனாய் இருந்தான். எண் 12:3 இந்த அதிகாரத்தின் முதற்பாகத்தில் மிரியாமும், ஆரோனும் மோசேக்கு விரோதமாகப் பேசி தேவனால் தண்டிக்கப்பட்டார்கள். மோசேயோ அவர்களுக்காக தேவனிடம் ஜெபித்து உதவினார். இது போல நாம் இருக்கிறோமா? (மத் 5:44).

தேவன் தம்மை ஆராதிக்க இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து விடுவித்து கானான் தேசத்திற்கு கொண்டு சென்ற போது வழிநடத்தும் பொறுப்பை மோசே ஏற்றார். ஆனால், வழியில் அந்த மக்கள் மூலம் மோசே பல போராட்டங்களையும், நிந்தனை களையும் சந்திக்க வேண்டியிருந்தது. முதலாவது, செங்கடல் தடை வந்த போது ஜனங்கள் மோசேயிடம் இந்த வனாந்திராத்தில் எங்களை சாகும்படிக்கா கொண்டு வந்தீர்? என்று முறை யிட்டார்கள். அப்போது மோசே **பயப்படாதிருங்கள் தேவன் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்** என்று தைரியப் படுத்தினார். (யாத் 14:11 - 14) மிகுந்த சிரமங்களுக்கிடையில் ஒரு ராஜாங்கத்தையே எதிர்த்து இவர்களை அழைத்து வந்தும் இந்த ஜனங்கள் புரிந்து கொள்ளவில்லையே என்று மோசே கோபப்படவில்லை என்பது ஆச்சரியமே.

இரண்டாவதாக, ஜனங்கள் (யாத் 15:24) மாராவிலே வந்த போது அங்கு தண்ணீர் கசப்பாய் இருந்ததின் நிமித்தம் ஜனங்கள்

மோசேக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். இங்கே தேவனை நோக்கி மோசே கூப்பிட்டு அந்தப் பிரச்சனையை மேற் கொண்டனர். இனிப்பும், கசப்பும் கலந்ததே நம் வாழ்க்கை. அதில் கசப்பான தருணங்களில் நாமும் யார்மீதும் எரிச்சலடையாமல் தேவனை நோக்கிக் கூப்பிட்டு ஆறுதல் பெற வேண்டும்.

மூன்றாவதாக, சீன் வனாந்தரத்தில் ஜனங்களுக்கு பசி உண்டாகி ஆகாரமில்லாமல் தவித்தபோதும் அவர்கள் மோசேயை எதிர்த்து விரோதமாகப் பேசினார்கள். தேவனோ அவர்களுக்கு மன்னாவைத் தந்து அன்றுள்ள ஆகாரத்தை சேகரிக்க வலியுறுத்தினார். இது நாம் நாளையதினக் கவலையை நீக்க வேண்டுமென்ற கிறிஸ்துவின் உபதேசத்திற்கு முன்னோடியாக உள்ளது. (யாத் 16:2–4).

நான்காவதாக, ரெவிதீம் என்ற வனாந்தரத்தில் குடிக்க தண்ணீர் கிடையாத போதும் ஜனங்கள் தேவனை நோக்காமல் மோசேயோடே வாதாடினார்கள். அதற்கு மோசே கர்த்தரை ஏன் பரீட்சை பார்க்கிறீர்கள்? என்று சொல்லி அங்கும் தேவனை நோக்கிக் கூப்பிட்டான்? கர்த்தர் கன்மலையை கோலினால் அடிக்கப்பண்ணி தண்ணீர் புறப்பட்டு வரப் பண்ணினார். ஜனங்கள் வாதாடி கர்த்தரைப் பரீட்சை பார்த்தபடியால் அந்த இடம் மாசா என்றும் மேரிபா என்றும் பேரிடப்பட்டது. நம்முடைய இக்கட்டுகளில் நாம் எப்படி நடந்து கொள்கிறோம்? (யாத் 17:2 – எபி 3:14,15) இது போல் பல சந்தர்ப்பங்களில் ஜனங்கள் மோசேயை கோபமூட்டியும் அவன் தன் சாந்த குணத்தைக காத்துக் கொண்டான். அப்படிப்பட்ட மோசே இரண்டு இடங்களில் தன் கோபத்தை வெளிப்படுத்தியதைப் பார்ப்போம்.

சீனாய் மலைக்கு மோசேயை வரவழைத்து நியாயப் பிரமாணக் கட்டளைகளை தேவன் சாட்சிப் பலகைகள் எனப்பட்ட கற்பலகைகளில் அவரே எழுதிக் கொடுத்தார் (யாத் 32:15,16) என்னைத் தவிர வேறே தேவர்களோ, விக்கிரகங்களோ உங்களுக்கு உண்டாயிருக்க வேண்டாம் என்று மலைமீது தேவன் கட்டளைகளைப் பிறப்பித்து கொண்டிருக்கும்போதே மலை அடிவாரத்தில் ஜனங்களின் தொல்லை தாங்காமல் ஆரோன் பொன் கன்று குட்டியை உண்டாக்கி விக்கிரக ஆராதனைக்கு அடிகோலினான். நம் கிறிஸ்தவ ஜீவியத்திலும் முன்னேற்றத்தைத் தடுக்கும் மாம்சம் ஆவிக்கு விரோதமாகப் போராடுகிறதைப் புரிந்து நாம் நடக்க வேண்டும் (கலாத் 5:17)

இங்கு தான் விக்கிரக ஆராதனையை பொறுக்க முடியாமல் மோசே தன் கையிலிருந்த சாட்சிப் பலகைகளை மலையின் அடிவாரத்தில் கோபத்தில் உடைத்துப் போட்டான் (யாத் 32:19) இது நியாயமாக இருந்ததால் தேவன் மோசேயை ஒன்றும் செய்யவில்லை. ஆனால், தேவன் எழுதிக்கொடுத்த பலகை உடைத்தது நமக்கு அதிர்ச்சி அளிக்கிறது. இதற்கு மாறாக, நமக்கு நியாயம் போல் தோன்றுகிற ஒரு கோபத்தை தேவன் மன்னிக்க வில்லை என்பது நமக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணுகிறது. எண் 20:11,12 ல் இன்னொரு முறை தண்ணீர் தட்டுப்பாடு வந்த போது தேவன் இந்த முறை தம்முடைய பரிசுத்தத்தை (மகிமையை) இன்னும் அதிகமாய் அந்த ஜனங்கள் மத்தியில் விளங்கப்பண்ண **கன்மலையைப் பார்த்துப் பேசுங்கள்** என்றார்

சீன் வனாந்தரத்தில் கன்மலையைப் பார்த்துப் பேசுங்கள் என்ற தேவ வார்த்தையை மறந்து மோசே ஜனங்களின் அலட்சயை தாங்கமாட்டாமல் கன்மலையைக் கோலினால் அடித்து விட்டான். கவனியுங்கள் 12 ம் அதிகாரத்தில் உலகத்தில் சகல மனிதரிலும் சாந்த குணத்தில் சிறந்தவன் என்று பேரெடுத்த மோசே ஜனங் களின் தொடர் தொல்லையால் 20 ம் அதிகாரத்தில் கலக்காரரே கேளுங்கள் என்று மனம்பதறி பேசி, தேவ கட்டளை மீறினதால் கானான் செல்லும் ஆசீரை இழந்தான். ஒருவன் எவ்வளவு நீதியாய் இருந்தாலும் ஒரு மீறுதல் அவனைக் குற்றவாளியாக்தி விடலாம் (எசேக் 18:24) என்பதற்கு இது ஒரு உதாரணம். மனுஷருடைய கோபம் தேவ நீதியை நடப்பிக்க மாட்டாது (யாக் 1:20) என்பதை நாம் உணர்ந்து கோபிக்கிற விஷயத்தில் முடிந்த அளவு தாமதப்படுத்த வேண்டும். உன் மனதில் சீக்கிரம் கோபம் கொள்ளாதே (பிர7:9) என்ற ஆலோசனையை ஏற்று தேவனுக்கு பயந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நம் கடமையை நிறைவேற்று வோம். தேவக்கிருபை நம்மனைவ ரோடுங்கூட இருப்பதாக ஆமென்! ✝

**பாதை முடிந்ததென**

**பாதியில் திரும்பிவிடாதே - அவர்**

**பாதை காட்டுபவர் மட்டுமல்ல**

**பாதையை உண்டாக்கபவர்.**

# தூக்கம்

சகோ. K.M. பிலிப்

இம்மாதத் தலைப்பு எல்லோருக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கும். ஏனெனில், தூக்கத்தை விரும்பாதவர்கள் ஒருவருமில்லை. இக்கட்டுரையை ஏற்றுக்கொள்ளும் எல்லோருக்கும் தேவன் சுகமான தூக்கத்தை கொடுக்க இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன்.

ஞானமுள்ள தேவன் இவ்வுலகைப் படைக்கும்போதே வெளிச்சத்தையும், இருளையும் வெவ்வேறாகப் பிரித்தார். வெளிச்சத்திற்குப் பகல் என்றும், இருளுக்கு இரவு என்றும் பேரிட்டார். இந்த இரவு நேரத்தில்தான் மனிதன் தூங்கி இளைப்பாற ஒரு வாய்ப்பையும் கொடுத்திருக்கிறார். ஒரு இரவில் 8-மணி நேரமாவது தூங்க வேண்டும் என்று மனிதன் வகுத்துள்ளான். உறக்கம் மனிதனுக்கு உற்சாகத்தையும், தெளிவையும், மன அமைதியையும் கொடுக்கிறது. தூக்கத்தை, உறக்கம், நித்திரை என்றும் வேதம் கூறுகிறது. இன்றைய நாட்களில், எவ்வளவு பணம், பதவி, பட்டம், செல்வாக்கு இருந்தாலும் தூக்கமின்றி தவிக்கின்ற ஒரு கூட்டத்தாரை நாம் பார்க்கிறோம். பயம், கலக்கம், வியாதி, வியாகுலம், விரக்தி, எதிர்கால எதிர்பார்ப்புகள் இப்படிப்பட்ட துக்கமான சூழலில் தூக்கத்தை இழந்து போகிற ஒரு கூட்டமும் உண்டு. இவர்கள் எல்லோரும் வேதம் வெளிப்படுத்தும் மாபெரும் ஓர் உண்மையை புரிந்து கொள்ள வேண்டும். அதுதான், **அவரே (தேவனே) தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரை அளிக்கிறார் (சங் 127:3) என்பதாகும். அப்படியென்றால், ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வில் தேவனைப் பிரியப்படுத்த வேண்டும்** என்பதே உண்மையாகும்.

இதைத்தான் தாவீதின் அனுபவத்தில் நாம் அறிகிறோம். ராஜாவாகிய தாவீதின் மகன் அப்சலோம் தாவீதைக்கொன்று விட்டு தான் ராஜாவாகத் திட்டமிட்டு, தாவீதையும் அவனைச் சார்ந்தவர்களையும் துரத்துகிறான். தகப்பன் தாவீதோ தன் மகனுக்கு எதிராக எழும்பக் கூடாதென்பதால் மகனுக்கு விலகி வனாந்தரம், மலைப் பகுதிகளுக்கு ஓடிப்போகிறான். இதன் அனுபவத்தை சங்கீதம் 3,4 ல் தாவீது வெளிப்படுத்துகிறார். **கர்த்தாவே என் சத்துருக்குள் எவ்வளவாய் பெருகியிருக்கிறார்கள்; எனக்கு விரோதமாய்**

**எழும்புகிறவர்கள் அநேகர்** என்பது தாவீதின் மனதில் பயத்தை உருவாக்கியிருக்க வேண்டும். **தேவனிடத்தில் அவனுக்கு இரட்சிப்பில்லை என்று என் ஆத்துமா குறித்துச் சொல்லுகிறார்கள்** என்பதும் (சங் 3:1,2) தாவீதுக்கு சோர்வையும், வெட்கத்தையும் ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஒரு தகப்பன் என்ற நிலையில் மகனின் எதிர்ச்செயல் தாவீதின் மனதில் மிகப்பெரும் துக்கத்தை ஏற்படுத்தி, தூக்கமின்றி அலைந்து திரிந்திருக்க வேண்டும். ஆனால் தாவீது தொடர்ந்து சொல்கிறார், **நான் படுத்து நித்திரை செய்தேன்; விழித்துக் கொண்டேன்; கர்த்தர் என்னைத் தாங்குகிறார்** (3:5) என்றும், **சமாதானத்தோடே படுத்துக் கொண்டு நித்திரை செய்வேன். கர்த்தாவே நீர் ஒருவரே என்னை சுகமாய்த் தங்கப் பண்ணுகிறீர்** (சங் 4:8) என்ற உண்மையையும் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார். இதன் காரணங்களில் ஒன்று பக்தியுள்ளவனைக் கர்த்தர் நமக்காகத் தெரிந்து கொண்டார் (சங் 4:3). இரண்டாவது, தாவீதை என் இருதயத்திற்கு ஏற்றவனாகக் கண்டேன் (அப் 13:22) என்று தேவனே சாட்சி கொடுப்பதுமாகும். மேலும், தாவீது தூங்குமுன் நான் கர்த்தரை நோக்கி சத்தமிட்டுக் கூப்பிட்டேன். அவர் தமது பரிசுத்த பர்வதத்திலிருந்து எனக்குச் செவி கொடுத்தார் (3:4) பிரியமானவர்களே! இப்படி தாவீதைப் போல நாமும் பக்தியுள்ளவர்களாய், தேவனுக்குப் பிரியமானவைகளைச் செய்து, அவரை நோக்கிக் கூப்பிடுவோமானால், நீ படுக்கும்போது பயப்படாதிருப்பாய்; நீ படுத்துக் கொள்ளும்போது உன் நித்திரை இன்பமாயிருக்கும் ;(நீதி.3:23,24).

பிரியமானவர்களே! புதிய ஏற்பாட்டில் துக்கத்தின் ஆசீர்வாதத்தை பெற்ற தேவமனிதனை சந்திப்போம் அவர் 12 சீடர்களில் ஒருவர்; துடுக்கானவர்; எதிலும் துணிந்து இறங்குபவர். கற்பாறை போன்றவர்; அவர்தான் சீமோன் பேதுரு. பேதுரு யாக்கோபு, யோவான் மூவரும் இயேசுவோடு அதிகம் நெருக்கமாயிருந்தவர்கள். இயேசு பரமேறியபின் சபை உருவான முதலாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சுவிசேஷத்திற்குக் கீழ்படிந்த யூதர்களும், புறஜாதிகளும், 3000,5000 திரளான மக்களும் என்று சீஷர்களுடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று (அப் 2.41;4:4,5:14). ஆங்காங்கே சபைகள் தோன்றின. இதனால் பொறாமையும், எரிச்சலும் கொண்ட ஆசாரியர், மூப்பர், வேத பாரகர்களும், ஆலோசனை சங்கத்தின் உதவியால் சபைக்குத் துன்பத்தைக் கொடுத்தார்கள். சபையார் சிதறடிக்கப்பட்டார்கள். பேதுருவை கொலை செய்யப்

பிடித்தவர்கள் பஸ்கா பாண்டிகைக் காலமாயிருந்ததால் பேதுருவை சிறையில் அடைத்தனர். சிறையில் பேதுரு, தேவ தூதன் வந்து தட்டி எழுப்பும் அளவுக்கு நித்திரை செய்து கொண்டிருந்தார். (அப் 12:6,7). இங்கே நாம் கவனிக்க வேண்டியது 1. சபையார் துன்பப்படுத்தப்பட்டு சிதறிடிக்கப்பட்டுள்ளனர். 2. பேதுருவின் நெருங்கிய நண்பன் சீஷன் யாக்கோபு பட்டயத்தினால் கொலை செய்யப்பட்டான் (12:2) 3. தன்னையும் கொலை செய்யும்படி சிறையில் அடைத்துள்ளனர். 4. முடிந்தால் கொலை செய்யப் போகிறார்கள். இவ்வளவு கொடிய நெருக்கடியான சூழ்நிலையிலும் பேதுருவால் எப்படி அயர்ந்து நித்திரை செய்ய முடிந்தது என்பதைத்தான் என் காலங்கள் தேவனுடைய கரத்திலிருக்கிறது (சங் 31:15), முன்புறத்திலும் பிற்புறத்திலும் நீர் என்னை நெருக்கி உமது கரத்தை என்மேல் வைக்கிறீர் (139:5). ஆகவே, கர்த்தாவே நீர் ஒருவரே என்னை சுகமாய்த் தங்கப்பண்ணுகிறீர் (சங் 4:8) என்ற விசுவாசம் பேதுருவின் மனதை நிரப்பியதால் நிம்மதியாய் உறங்கினார்

தேவபிள்ளைகளே! சோதனைகளும், வேதனைகளும், நடக்கக் கூடாததும், உங்களுக்கு மன அழுத்தத்தைக் கொடுத்து நித்திரையின்றி தவிக்கிறீர்களா? நாம் இவைகளிலே சிந்தித்துக் கொண்டிராமல், உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு சமாதானமுண்டு, அவர்களுக்கு இடறலில்லை (119,165) என்பதை புரிந்து கொண்டு இரவில் ஆவிக்குரிய காரியங்களையே சிந்தித்துக்கொண்டு அல்லது படித்துக்கொண்டு படுத்திருப்பீர்களானால் சமாதானத்தின் தேவன் நல்ல உறக்கத்தைத் தருவார்.

மேலும், பேதுரு இயேசுவின் ஜீவனுள்ள வார்த்தையின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருந்தாள். இயேசு பேதுருவிடம் விசேசமான பொறுப்புகளைக் கொடுத்திருந்தார். அதில் ஒன்று மத்தேயு 16:18 ல் இந்தக் கல்லின் மீது என் சபையைக் கட்டுவேன் என்றும், பரலோக ராச்சியத்தின் (சபையின்) திறவுகோலை நான் உனக்குத் தருவேன் என்றார் (19). அதன்படி இயேசு பரமேறிய பின் பெந்தகோஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையால் எருசலேமில் மூவாயிரம் பேர் கொண்ட இரட்சிக்கப்பட்டவர்களைக் கொண்டு பரலோக ராச்சியமாகிய சபையைக் கட்டினார். இப்படி பேதுருவுக்கு இயேசு கொடுத்த பொறுப்பை பரிசுத்த ஆவியானவரின் பெலத்தால் நிறைவேற்றி முடித்தார். இதைப்போலவே இயேசு பரமேறுமுன் பேதுருவிடம் 3முறை **என் ஆடுகளை மேய்ப்பாயாக** என்ற பொறுப்பையும் கொடுத்தார் (யோ 21:15-17). இந்த தேவ ஊழியத்தை

செய்யும்படி ஒரு எதிர்காலம் உண்டு. அதை நான் செய்து முடிப்பேன் என்ற ஊழியத்தின் மீது இருந்த வாஞ்சையே அவருக்கு நம்பிக்கையை கொடுத்தது தேவனுடைய அதிகாரத்தைத் தாண்டி, எந்த உலக அதிகாரத்தின் முடிவும் என்னை பாதிக்காது. அவருடைய கட்டுப்பாட்டிற்குட்பட்டே தேவ பிள்ளைகளுக்கு காரியங்கள் நடக்கும். இன்று இரவில் தூங்கி எழுந்து நாளைக்கு தேவன், குமாரன் மூலம் கொடுத்த பொறுப்புகளை செய்து முடிப்பேன்.

கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார். மனுஷன் எனக்கு என்ன செய்வான் (118:16). என்ற தைரியமே பேதுருவுக்கு சிறையிலும் நல்ல உறக்கத்தைக் கொடுத்தது. இந்த பேதுருவைப் போலவே சுவிசேஷத்தினால் நம்மை அழைத்த தேவன் சில உன்னதமான, பெருமைக்குரிய பொறுப்புகளை நமக்குக் கொடுத்திருக்கிறார். இப்பொறுப்புகளை நிறைவேற்ற இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் நான் உங்களோடிருப்பேன் என்ற தைரியத்தையும் கொடுத்திருக்கிறார். இன்று எனக்கு தேவன் கொடுத்த பொறுப்பை நிறைவேற்றிவிட்டேன் என்ற திருப்தி இருக்குமானால், நீ படுக்கும்போது பயப்படாதிருப்பாய்.... உன் நித்திரை இன்பமாயிருக்கும் (நீ 3:24) ஆமென்! ✝

## நாளும், நடப்பும்

- *செப்டம்பர் 1 முதல் 9,10,11,12 ஆகிய வகுப்புகளுக்கு பள்ளி தொடக்கம்*
- *செப்டம்பர் , அக்டோபரில் மூன்றாம் அலை உச்சம் பெற வாய்ப்பு உள்ளதாக வல்லுநர்கள் எச்சரிக்கை. அக்டோபரில் 2 லட்சம் வரை கொரோனா பதிப்பு அதிகரிக்க கூடும் என்று கணிப்பு*
- *தமிழ்நாட்டில் 24x7 கொரோனா தடுப்பூசி திட்டம். மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.*
- *தமிழகத்தில் 7 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு சென்னை வானிலை மையம் அறிவிப்பு.*
- *ஆப்கானிஸ்தானை 20 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் தாலிபான்கள் கைப்பற்றினர்*
- *ஊனமுற்றோருக்கான ஒலிம்பிக் போட்டிகள் தொடக்கம்.*

# கிறிஸ்துவின் வாழ்வில் நாங்கள் யார்?

எங்களை உங்களால் அடையாளம் கண்டு கொள்ள முடிகிறதா? ஒவ்வொரு குறிப்புகளையும் வாசித்து கவனமாக யோசியுங்கள். முதல் குறிப்பிலேயே எங்கள் பெயரை நீங்கள் யூகித்துவிட்டால் 100 மதிப் பெண்களை உங்களுக்கு நீங்களே கொடுத்து விடுங்கள். ஐந்தாவது குறிப் பிறகுப் பிறகு நாங்கள் யார் என்பதை கண்டுபிடித்தால் உங்கள் மதிப்பெண் 60. எங்கள் அடையாளத்தை நீங்கள் உறுதிசெய்துவிட்டால் தேவனுடைய வார்த்தையிலிருந்து உண்மையை சரிபார்க்க கொடுக்கப்பட்டுள்ள வேத வசனங்களை ஆராய்ந்து பாருங்கள்.

- ✿ நான் இயேசுவுக்கு சொந்தக்காரன் அவரைவிட ஆறுமாதங்கள் மூத்தவன் [லூக்கா 1:36]
- ✿ பெத்தானியா ஊரில் வசித்த இவர்களை இயேசு மிகவும் நேசித்தார் [யோவான் 11:1–5].
- ✿ கிறிஸ்துவை நான் காணுமுன்னே மரிக்கமாட்டேன் அவரை என் கைகளில் ஏந்தினேன் [லூக்கா2:22–35].
- ✿ கிறிஸ்து எரிகோவில் பிரவேசித்தபோது, அவரைக் காணும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினேன் [லூக்கா 19:1–6].
- ✿ இயேசு என்னிடத்திலிருந்து ஏழு அசுத்த ஆவிகளைத் துரத்தினார் [லூக்கா 8:2].
- ✿ இயேசு என்னுடைய பன்னிரெண்டு வயது மகளை உயிரோடு எழுப்பினார் [லூக்கா 8:2]
- ✿ நாங்கள் மறு ரூப மாலையில் கிறிஸ்துவோடு தோன்றினோம் [லூக்கா 9: 28–36]
- ✿ நான் இயேசுவுக்கு நன்றி செலுத்த திரும்பி வந்த சமாரியன் [லூக்கா 7:11–19]
- ✿ பேதுரு என் காதை வெட்டினபோது இயேசு அதை சுகப்படுத்தினார் [லூக்கா 22:50,51; யோவான் 18:10]
- ✿ நான் இவரிடத்தில் எந்தக் குற்றத்தையும் காணவில்லை. ஆகவே நான் இவரை விடுதலையாக்குவேன் [லூக்கா 23:136].

# உபதேசங்கள் தேவனுடையது

Bro.V. **ஆசீர்வாதம்**

சென்ற மாத தொடர்ச்சி...

**மே**லும் இயேசுவானவர் லுக்கா 22 : 29,30ல் என் பிதா எனக்கு ஒரு ராஜ்ஜியத்தை ஏற்படுத்தினதுபோல நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன். நீங்கள் என் ராஜ்ஜியத்திலே என் பந்தியில் போஜனம் பண்ணி, இஸ்ரவேலின் பன்னிரெண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாய்ச் சிங்காசனங்களின்மேல் உட்காருவீர்கள் என்றார். என் பிதா எனக்கு ஒரு ராஜ்ஜியத்தை ஏற்படுத்தினதுபோல நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன் என்று இயேசுவானவர் அப்போஸ்தலருக்குச் சொல்லுகிறார். அதிகாரமும் சட்டங்களும் குடிமக்களும் உடைய நிர்வாகம், ராஜ்ஜியமாக கருதப்படும். சகல அதிகாரங்களும் சட்டதிட்டங்களும் தேவனுடையது. அவைகள் கிறிஸ்துவுக்கு ஒப்புவிக்கப்பட்டபடியினாலே அது கிறிஸ்துவின் ராஜ்ஜியமாயின. தேவனுடைய ராஜ்ஜியமாகிய கிறிஸ்துவின் ராஜ்ஜியதில் [எபேசி 5:5] என்றும் தமது அன்பின் குமாரனுடைய ராஜ்ஜியத்திற்கு உட்படுத்தினார். [கொலோ 1 : 13] என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகையால் தேவனுடைய ராஜ்ஜியம் கிறிஸ்துவின் ராஜ்ஜியமாக இருக்கிறது. அதாவது தேவனுடைய அதிகாரமும் ஆளுகையும் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்போலவே கிறிஸ்துவும் தம்முடைய அதிகாரத்தையும் ஆளுகையையும் அப்போஸ்தலர் மூலமாக செயல்படுத்த அவர்களுக்கு ஒரு ராஜ்ஜியத்தை ஏற்படுத்தப் போவதாக சொன்னார். மேலும், என் ராஜ்ஜியத்தில் என் பந்தியில் போஜனம் பண்ணுவீர்கள் என்றும் சொன்னார். அதாவது, கிறிஸ்துவின் ராஜ்ஜியமாக இருக்கின்ற அவருடைய சரீரமான சபை அப்போஸ்தலருடைய அதிகாரத்தினால் நிர்வாகிக்கப்படும் என்பதே இதன் பொருள். தேவனுடைய ராஜ்ஜியம், கிறிஸ்துவின் ராஜ்ஜியம், அப்போஸ்தலருடைய ராஜ்ஜியம் என்று சொல்லப்பட்டிருந்தாலும் அது ஒரே தேவனுடைய ராஜ்ஜியத்தையே குறிக்கும். தேவனுடைய அதிகாரம் கிறிஸ்துவின் மூலமாகவும், கிறிஸ்துவின் அதிகாரம் அப்போஸ்தலர் மூலமாகவும், அப்போஸ்தலர் அதிகாரம் சபைகள் மூலமாகவும் செயல்படுத்தப்படுகிறது. ஆகையால், தேவனுடைய உபதேசங்கள் [யோவா 7 : 16, 1 தீமோ 6 : 1, தீத்து 2 : 9] கிறிஸ்துவின் உபதேசங்களாக இருக்கிறது. [11 யோவா 9] கிறிஸ்துவின் உபதேசங்கள் அப்போஸ்தலருடைய உபதேசங்களாக இருக்கிறது [அப் 2:42]. தேவன் எந்த ஒரு

மனிதனையும் தனிப்பட்ட வகையில் இரட்சிப்புக்கு வழிநடத்த அவன்மேல் அதிகாரம் செலுத்தாமல் கிறிஸ்துவின் மூலமாக அதை செயல்படுத்துகிறார், அப்படிப்போலவே கிறிஸ்துவும் எந்த ஒரு மனிதனையும் தனிப்பட்ட வகையில் இரட்சிப்புக்கு வழி நடத்த அவன்மேல் அதிகாரம் செலுத்தாமல் அப்போஸ்தலருக்கு தாம் ஒப்புக்கொடுத்த உபதேசங்கள் மூலமாக சபைகளைக் கொண்டே அதிகாரம் செலுத்த விரும்புகிறார். இங்கே இந்த பாடத்தின் நோக்கம் இங்கே தெளிவாக்கப்படுகிறது. அதாவது, உபதேசங்கள் தேவனுடையது. அது கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டது, கிறிஸ்து அவைகளை அப்போஸ்தலருக்கு ஒப்புக்கொடுத்தார். அப்போஸ்தலர் அவைகளை சபைகளுக்கு ஒப்புக்கொடுத்தார்கள். சபைகள் அவைகளை இப்பொழுது உலகத்தில் செயல்படுத்தி வருகின்றன. சட்டங்கள் ஒப்புக் கொடுக்கப்பட்டிருந்தால் அதிகாரமும் ஒப்புகொடுக்கப்படும் அல்லவா? ஆகையால், இயேசுவானவர் அப்போஸ்தலருக்கு ஒரு ராஜ்ஜியத்தை அதாவது ஆளுகையும் அதிகாரத்தையும் ஏற்படுத்தப் போவதாகச் சொன்னார். கிறிஸ்துவின் ஆளுகையும் அதிகாரமும் மனுஷருக்கு எவ்வளவு முக்கியமானதாக இருக்கிறதோ அவ்வளவு முக்கியமானதாக அப்போஸ்தலருடைய ஆளுகையும் அதிகாரமும் இருக்கிறது என்பதை நாம் உணரவேண்டும். 3. எங்களுக்குச் செவி கொடுங்கள் என்று அப்போஸ்தலர் சொல்லுகிறார்கள்

- ★ 2 பேதுரு 1 : 16 நாங்கள் தந்திரமான கட்டுகதைகளைப் பின்பற்றினவர்களாக அல்ல, அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்களாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும் வருகையையும் உங்களுக்கு அறிவித்தோம்.

- ★ 1 யோவான் 1 : 2 பிதாவினிடத்திலிருந்தும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக் குறித்துச் சாட்சிக்கொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம்.

- ★ 1 யோவான் 1 : 3 நீங்களும் எங்களோடே ஐக்கிய முள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும், கேட்டும் இருக்கிறதை உங்களுக்கு அறிவிக்கிறோம். எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது.

★ 2 பேதுரு 3 : 2 இரட்சகராயிருக்கிற கர்த்தருடைய அப்போஸ்தலராகிய எங்களுடைய கட்டளைகளை நீங்கள் நினைவுக்கூரும்படி இந்த நிருபங்களினால் உங்கள் உண்மையான மனதை நினைப்பூட்டி எழுப்புகிறேன்.

★ 1 யோவான் 4 : 6 நாங்கள் தேவனால் உண்டானவர்கள் தேவனை அறிந்தவன் எங்களுக்குச் செவிகொடுக்கிறான், தேவனால் உண்டாயிராதவன் எங்களுக்கு செவிகொடுக்கிற தில்லை, இதனாலே சத்திய ஆவி இன்னதென்றும், வஞ்சக ஆவி இன்னதென்றும் அறிந்திருக்கிறோம்

★ யூதா 17 நீங்களோ பிரியமானவர்களே, நம்முடைய கர்த்த ராகிய இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலரால் முன் சொல்லப்பட்ட வார்த்தைகளை நினைவு கூருங்கள்.

★ 2 தெச 2 : 15 சகோதரரே, நீங்கள் நிலைகொண்டு, வார்த்தை யினாலாவது நிருபத்தினாலாவது நாங்கள் உங்களுக்கு உபதேசித்த முறைமைகளைக் கைக்கொள்ளுங்கள்.

★ 2 தெச 3 : 4 நாங்கள் கட்டளையிடுகிறவைகளை நீங்கள் செய்துவருகிறீர்களென்றும், இனிமேலும் செய்வீர் களென்றும் உங்களைக்குறித்துக் கர்த்தருக்குள் நம்பிக்கை யாயிருக்கிறோம்.

★ 1 தெச 4 : 1 சகோதரரே, நீங்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும் தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டு மென்று நீங்கள் எங்களால் கேட்டு ஏற்றுக்கொண்டபடியே அதிகமதிகமாய்த் தேறும்படிக்கு, கர்த்தராகிய இயேசுவுக்குள் உங்களை வேண்டிக் கொண்டு புத்திசொல்லுகிறோம்.

★ 1 தெச 4 : 2 கர்த்தராகிய இயேசுவினாலே நாங்கள் உங்களுக்குக் கொடுத்த கட்டளைகளை அறிந்திருக் கிறீர்களே.


★ 1 கொரி 15 : 2 நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள், மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாய் இருக்கும்.

★ பிலிப் 4 : 9 நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகள் எவைகளோ, அவை களையேச் செய்யுங்கள், அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடு இருப்பார்.

Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2021 - 2023
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Published on 17/18 th of Every Month


## எங்களது இதர வெளியீடுகள்


















சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

**தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்**

## திருமறை தியானம்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி

தமிழன் தொலைக்காட்சியில்
சனி காலை 7.00 - 7.30 மணி

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

இயக்குனர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.



Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 34 இதழ் - 8 ஆகஸ்ட் - 2021

தனிப்பிரதி ரூ.10/-



## புதிய ஆத்துமாக்களுடன் ஊழியர்



## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| வேதாகமம் ஓர் அறிமுகம் | 11 |
| பெண்கள் பகுதி | 14 |
| வாலிபர் பகுதி | 17 |
| சிறுவர் பகுதி | 20 |
| வெளிப்படுத்தின விசேஷம் | 22 |
| சாந்தகுணத்தில் தலை... | 24 |
| தூக்கம் | 27 |
| உபதேசங்கள் தேவனுடயது | 32 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு தெரியப்படுத்தவும்.
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.



12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும்.
தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.




# World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Tamilan TV
Every Saturday 7:00 - 7:30 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026

